# “அமுதா ஐஏஎஸ் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்வோம்” ஹென்றி டிபேன் பரபரப்பு பேட்டி!

etvbharat.com/ta/!state/peoples-watch-executive-director-henry-deepan-about-balveer-singh-case-tamil-nadu-news-tns25071902019

ETV Bharat July 19, 2025

## பல்வீர்சிங் ஐபிஎஸ் வழக்கை விசாரித்த பின்னரும் அறிக்கையை இதுவரை வழங்காத அமுதா ஐஏஎஸ் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்வோம் என மக்கள் கண்காணிப்பக நிர்வாக இயக்குநர் ஹென்றி டிபேன் கூறியுள்ளார்.




மக்கள் கண்காணிப்பகம் நிர்வாக இயக்குநர் ஹென்றி டிபேன் ()

**மதுரை:** விசாரணை கைதிகளின் பல்லை பிடுங்கி சித்திரவதை செய்த அம்பாசமுத்திரம் ஏஎஸ்பி பல்வீர்சிங்கை தமிழக அரசு பாதுகாக்க முயல்கிறதா? என மக்கள் கண்காணிப்பகத்தின் நிர்வாக இயக்குநர் ஹென்றி டிபேன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மதுரையில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று ஹென்றி டிபேன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், “ திருநெல்வேலி முதன்மை நீதிமன்றம் (JM No:1) முன் நிலுவையில் உள்ள 4 காவல் சித்திரவதை வழக்குகளில் பல்வீர் சிங் ஐபிஎஸ் மற்றும் அவருடைய குழுவில் உள்ள 13 பேரின் பெயர்கள் குற்றப்பத்திரிக்கைகளில் இடம் பெற்றுள்ளது.

திருப்புவனம் அஜித்குமார் வழக்கில் காவலர்கள் கொலையாளிகளாக உறுதி செய்யப்பட்டதால் உடனடியாக கைது செய்யப்பட்டனர். அரசின் விரைவான நடவடிக்கை மற்றும் உயர் நீதிமன்றத் தலையீடு இவ்வழக்கை விரைவுபடுத்தி தற்போது சிபிஐ விசாரணை நடந்து வருகிறது.

ஆனால், பல்வீர்சிங் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அவரும் பிற காவலர்களும் இன்றும் பணியைத் தொடர்ந்து வருகின்றனர். பல்வீர்சிங் வழக்கில் பாதிக்கப்பட்ட அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஜாமீனில் வெளியே வந்த பிறகு தான் உண்மை வெளி வந்தது. காவல் துறை தங்கள் அதிகாரத்தால் மூன்று வாரங்களுக்கு மேல் இந்த உண்மையை மறைக்க முடிந்தது. முன்னதாக, அமுதா ஐஏஎஸ்சிடம் இருந்து இந்த வழக்கு தொடர்பான இடைக்கால அறிக்கை பெறப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அவரது முழு அறிக்கை நகல் கொடுக்க கோரினோம்.

ஆனால், இதுவரை அந்த அறிக்கை எங்களுக்கு கிடைக்கவில்லை. அதனால், அமுதா ஐஏஎஸ் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடர உள்ளோம். மேலும் வழக்கு எண் W.P.(MD) No. 20255/2023ன் அடிப்படையில் உயர்நீதிமன்ற உத்தரவு இருந்தும் அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தின் சிசிடிவி காட்சிகள் இன்னும் வழங்கப்படவில்லை. இது உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை மீறுகின்ற செயலாகும்.

அமுதா IAS இறுதி அறிக்கையை பாதிக்கப்பட்டவர்களுக்கும், சிபிசிஐடிக்கும் வழங்க வேண்டும். மேலும் அம்பாசமுத்திரம் காவல் நிலைய CCTV காட்சிகளை உடனடியாக வழங்க வேண்டும். சாதி வேறுபாடின்றி நான்கு வழக்குகளிலும் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய நிவாரணம் வழங்க வேண்டும். மாநிலத்தில் நடந்த காவல் சித்திரவதைகளின் போது ஏற்பட்ட மரணங்களுக்கான பல வழக்குகளில், விசாரணைகள் நிறைவடையாத நிலை தொடர்கிறது.

இது திட்டமிட்ட சட்டத் தாமதமாகும். மாவட்ட முதன்மை நீதிபதிகள் இதனை உடனடியாக கண்காணிக்க வேண்டும். சித்திரவதை மற்றும் காவல் மரண வழக்குகளின் விசாரணையை உயர் நீதிமன்றம் விரைவுபடுத்த வேண்டும்.

கடந்த 2023 ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் தேதி அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சட்டமன்றத்தில், பல்வீர் சிங் ஐபிஎஸ் கட்டாயக் காத்திருப்பில் வைக்கப்பட்டு பின் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதாக அறிவித்தார்.




மக்கள் கண்காணிப்பகம் நிர்வாக இயக்குநர் ஹென்றி டிபேன் (ETV Bharat Tamil Nadu)
மேலும் 2024 ஜனவரி 22-24-இல் அவர் மீதான பணியிடை நீக்க உத்தரவு ரத்து செய்யப்பட்டது. தற்போது அவர் முழுமையான ஊதியம் பெற்று, 2024 மார்ச் 18 முதல் டில்லி திஹார் சிறையில் உள்ள தமிழ்நாடு சிறப்பு VIII படையில் உதவி கமாண்டண்ட் ஆக பணியாற்றுகிறார்.

திருநெல்வேலி நீதிமன்றத்தில் வழக்கின் முதல் விசாரணை 2023 டிசம்பர் 13ஆம் தேதி அன்று நடைபெற்றது. இதுவரை நடந்த 22 விசாரணைகளில் பல்வீர் சிங் 10 முறை மட்டுமே நேரில் ஆஜராகியுள்ளார். மேலும், வழக்கின் விசாரணை இன்னும் தொடங்கவில்லை. இந்த சித்திரவதை வழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்று வரை இழப்பீடு வழங்கப்படவில்லை. காரணம் முக்கிய குற்றவாளி ஒரு காவல் துறை உயர் அதிகாரி என்பது தான்.

மனித உரிமை மீறலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐ.நா. 2005 தீர்மானப்படி, நீதியும் நிவாரணமும் பெற உரிமை உள்ளது. மேலும் CBCID, CC No. 2419/2023 வழக்கில் SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை குற்றப்பத்திரிக்கையில் சேர்க்க வேண்டும். அதன்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும்” என வலியுறுத்தினார்.